**OS.NO:42/2020.**

**PW1 : அசோகன்**

நாள் : 06.12.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

1, 4 ம் **பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2019 ம் ஆண்டு என் தந்தை வேலு இறந்துவிட்டார். என் தந்தைக்கும், எனக்கும், என் சகோதரருக்கு முக்கிய தொழில் விவசாயம்தான். என் தந்தை உயிருடன்இருந்த வரையில், நான், 1 ம் பிரதிவாதி, என் தந்தை மூவரும் கூட்டாக விவசாயம் செய்தோம் என்றால், சரிதான். எனக்கு விவசாயம் தவிர தனிப்பட்ட தொழில் இல்லை என்றால், சரிதான். எனக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால், சரிதான். விவசாயத்தை வைத்து தான் நான், 1 ம் பிரதிவாதி, என் தந்தை மூவரும் ஜீவனம் செய்தோம் என்றால், சரிதான். என் சகோதரி 3 ம் பிரதிவாதிக்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆகியிருக்கும். எனக்கு 2004 ம் ஆண்டில் திருமணம் நடந்து. எனக்கு திருமணமாகவதற்கு 10 வருடங்களுக்கு முன்பு 3 ம் பிரதிவாதிக்கு திருமணம் நடந்தது என்றால், சரிதான். 2019 ம் ஆண்டு என் தந்தை இறக்கும் வரை குடும்பத்தின் கணக்கு வழக்குகளை என் தந்தை பார்த்துக்கொண்டார். குடும்பத்தின் கணக்கு வழக்கை நான் பார்க்கவில்லை. என் அப்பாதான் பார்த்தார். குடும்பத்தின் கணக்கு வழக்கு விஷயங்கள் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால், சரிதான். 2019 ம் ஆண்டு என் தந்தை இறக்கும் வரை வழக்கு கூட்டு குடும்ப சொத்துக்களை நாங்கள் மூவரும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால், சரிதான். முத்துக்கிருஷ்ண ரெட்டி மகன்

மணி என்பவர் பிள்ளையார் குப்பத்தில் இருக்கிறார். பிள்ளையார் குப்பத்தில் ராஜி ரெட்டி குமாரர் கிருஷ்ண ரெட்டி என்பவர் எங்கள் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளார் என்றால், எனக்கு தெரியாது. தாவா 3 வது இனம் சர்வே 22/1 எ மற்றும் சர்வே எண்.22/1 சி, 23/3 ஆகிய 3 சொத்துக்கள் மணி என்பவர் ராஜி மகன் கிருஷ்ண ரெட்டியிடம் 29–07–1978 ல் கிரையம் வாங்கினார் என்றால், எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ன் படி 4 ம் பிரதிவாதி ரேவதி என்பவர் மணியிடம் கிரையம் பெற்றார் என்றால், சரிதான். என் தந்தை யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கினார், எவ்வளவு கடன் நிலுவையில் உள்ளது என்ற விவரங்களை வழக்கில் சொல்லவில்லை என்றால், சரிதான். என் தந்தைக்கு எந்த கடனும் இல்லை என்பதாலும், என் தந்தை எந்த கடனையையும் பைசல் செய்யவில்லை என்பதாலும்தான் அவைகளை பற்றி நான் வழக்கில் சொல்லவில்லை என்றால், சரிதான். தாவா 3 வது இனச்சொத்தில் வேலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நாங்கள் மூவரும் 2019 ம் ஆண்டு வரை கூட்டாக அனுபவித்தோம் என்றால், சரிதான். மேற்படி சொத்துக்களை 2007 ம் ஆண்டு வேலு எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால், அது சரியல்ல. வா.சா.ஆ.3 ன் படி என் தந்தை வேலு எனக்கு எப்போதும் கிரையம் கொடுத்தது கிடையாது என்றாலும், அது என்னால் தயார் செய்யப்பட்டது என்றாலும், அது சரியல்ல. என் தந்தை இறக்கும் வரையில் எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்பதால், இந்த சொத்தை என் தந்தையிடம் நான் கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றால், சரியல்ல. 2019 ம் ஆண்டு என் தந்தை இறக்கும் வரையில் எழுத்துப்பூர்வமான பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால்,

சரிதான். எங்கள் ஊரில் என் தந்தை பெயரில் 3 வீடுகள் உள்ளது. அந்த 3 வீடுகளை இந்த வழக்கில் காண்பித்துள்ளேன். என் பெயரில் தனியாக 1 வீடு உள்ளது. அந்த வீட்டை இந்த வழக்கில் காண்பிக்கவில்லை. என் பெயரில் உள்ள வீட்டை என் தந்தை இறப்பதற்கு முன்பே 2005, 2006 ஆண்டில் கிரையம் வாங்கினேன். உமாபதி என்பவர் என் தந்தை மீது வழக்கு போட்டார். அந்த வழக்கில் என் தந்தை இறந்த பிறகு, என்னையும், 1ம் பிரதிவாதியையும் என் தந்தையின் வாரிசாக சேர்த்து நடத்தினார் என்றால், சரிதான். அந்த வழக்கை 1ம் பிரதிவாதி வழக்கறிஞருக்கு கட்டணம் செலுத்தி, நடத்தினார் என்றால், என் அப்பாவோடு அந்த வழக்கு முடிந்துவிட்டதாகவும், உமாபதி அந்த வழக்கில் ஜெயித்துவிட்டதாகவும் சொன்னார்கள். உமாபதி தாக்கல் செய்த வழக்கு இன்னும் ராணிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், நிறைவேற்று மனு நிலுவையில் உள்ளது என்றால், உமாபதியை நான் கேட்டதற்கு வழக்கு முடிந்துவிட்டதாக சொன்னார். என் தந்தை இறந்த பிறகு, குடும்பத்தில் வரவு செலவு கணக்குகளை 1ம் பிரதிவாதி என்னிடம் கேட்டார் என்றால், என் அப்பாவோடு எல்லாம் முடிந்துவிட்டது. மணியிடம், 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தாவா 3வது இன சொத்தில் வரிசை எண்.1,3,4 ஆகியவற்றில் என் தந்தைக்கு பாதி பாகம் உள்ளது என்றால், எனக்கு தெரியாது. தாவா 3வது இனச்சொத்தில் என் தந்தை அவருக்குரிய பாதி பாகத்தை எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்வது தவறு என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், அது செல்லத்தக்கதல்ல என்றாலும், அது சரியல்ல. தாவாவில் தவறாக விவரங்களை கூறி, தவறாக பாகம்கேட்கிறேன் என்றாலும், கூட்டுக்குடும்ப சொத்துக்களை சிலவற்றை விட்டுவிட்டு நான் பாகம் கேட்பதாலும், வழக்கு

நிலைக்கதக்கதல்ல என்றாலும், சரியல்ல. தவறான நோக்கத்திற்காக, தவறான காரணங்களுடன் பரிகாரம் கோருவதாலும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

S/d. M.Selvam,
I Additional District Judge,
Ranipet.